முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 657**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.07.2021, சனிக்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
தவசியாக வாழும் தேசிகனே
கர்மவினை நீக்கி உலகமக்களை
கருணைகொண்டு ஞானவான்களாக்க வேண்டி
2. வேண்டியே எந்தன் அவதாரமாக வந்த
வெற்றிமுகம் காட்டும் ஞானியே
உண்டான உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
உயர்வாக சுப்ரமணியர் யானும் அருளுவேன்
3. அருளாக அறமாக அகிலத்தின் ஆக்கசக்தியாக
அண்ணலாக அருட்சுடராக விளங்கும் அரங்கனை
வரமாக யான் உந்தனுக்கு நித்தம்நித்தம்
வள்ளல் தன்மை கூட்டி அருளிவர
4. வருகின்ற உன் தர்மத்தைஏற்று
வையகத்தில் வழிமொழிந்து செய்யும் தொண்டர்களெல்லாம்
பெருமைமிக்க முருகப்பெருமான் என் அருளாசியோடு
பேருலகில் ஞானவான்களாகி சிறப்பர்
5. சிறப்பறிவு ஊட்டும் அரங்கன் உன் கொள்கை
சித்தி தருவதோடு உலகோர்க்கு சித்தனாகும் வாய்ப்பும்
மறுப்பின்றி வழங்கி இனிதே
மண்ணுலகம் ஞானயுகமாற்றம் பெறக்கூடும்
6. கூடவே அரங்கன் தர்மத்தோடு
குறைவின்றி உலகமெங்கும் ஞானசேவை
ஈடேற வகை செய்யும் அரங்கன் தொண்டர்களே
இந்த கலியுகத்தின் சிறந்த ஞானவான்களாகும்
7. ஆகவே அரங்கன் தீட்சைபலம் பெற்றவரும்
அரங்கன் தர்மத்தை கைக்கொண்டவரும்
யுகமாற்றசேவையில் உயர் பங்குகொண்டு
ஓங்காரன் என் ஆசிபட உலகமாற்றம் செய்து மகிழ்வர்
8. மகிழவே அரங்கனே கலியின் சிறந்த யோகி
மரணம் வெல்லும் மாதவசி
அகிலத்தார் ஓங்காரக்குடிலின் தொடர்பு கூட்டி
அரங்கன் தர்ம நிழர்வகை இருந்து வர

9. வருகவே சர்வபலம் காணும்
வையகம் ஞானயுகமாற்றம் பெற்று
முருகப்பெருமான் என் ஆட்சியும்
முழுமையான ஞானசித்தர்கால ஆட்சியுமாக மலரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே
–சுபம்–